## தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## வேலைவாய்ப்பு பிரிவு



# இரும்பு மற்றும் எஃகு

**வெளியீடு**
**இயக்குநர்**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**
**இயக்ககம்**
**சென்னை- 600 032**

# இரும்பு மற்றும் எ.ஃகு (IRON and STEEL)

இரும்பு மற்றும் எ.ஃகுத் தொழில் இந்தியாவின் மிக முக்கியமான தொழில்களில் ஒன்றாகும். 1991ஆம் ஆண்டு பொருளாதார சீர்திருத்தத்திற்கு பிந்தைய தொழிலக வளர்ச்சியானது புதிய கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகிறது. அதில் குறிப்பிடத்தக்கது இரும்பு தொழிற்சாலைகள் ஆகும். நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை கட்டமைப்பதிலும் அனைத்து துறைகளில் தேவைப்படும் இயந்திரங்களை வடிவமைப்பதிலும் இரும்பு மற்றும் எ.ஃகு துறை முக்கிய பங்கு வகிக்கிறது. தற்காலத்தில் விவசாயம் மற்றும் சேவைதுறையை விட மிகுதியான வேலைவாய்ப்பை வழங்கும் துறையாக காணப்படுகிறது. இந்திய தொழில் துறையின் முதுகெலும்பாக விளங்கும் இரும்பு மற்றும் எ.ஃகுத் துறை, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் சார்ந்த படிப்புகள் ஆகியவற்றை வழங்கும் துறைகளில் முதன்மை துறையாகவும், எண்ணிலடங்கா தொழில்வாய்ப்புகளை அள்ளித்தரும் துறையாகவும், வேலைவாய்ப்பிற்கு முன்னுரிமை வழங்கும் துறையாகவும் விளங்குகிறது.

## 2009-ஆம் ஆண்டிற்கு பிந்தைய இந்திய இரும்பு எ.ஃகு துறை:

இரும்பு மற்றும் எ.ஃகு துறையில் நூறு சதவீதம் வரை வெளிநாட்டு முதலீடுகளுக்கு தானியங்கு ஒப்புதல் முறையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எ.ஃகு தொழிற்துறையை திறமையாகவும் போட்டித்தன்மையுடனும் மாற்றும் நோக்கில் விலை மற்றும் விநியோகக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டுள்ளது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதியில் வெளி வர்த்தகத்தின் மீதான கட்டுப்பாடுகள் இறக்குமதி வரியைக் கடுமையாகக் குறைப்பதன் மூலம் அகற்றப்பட்டன. மூலதனப் பொருட்களின் இறக்குமதி வரியைக் குறைத்தல், வர்த்தக கணக்கில் ரூபாயை மாற்றுவது, வெளிநாட்டு நிதிச் சந்தைகளில் இருந்து வளங்களைத் திரட்டுவதற்கான அனுமதி போன்ற பொதுவான கொள்கை நடவடிக்கைகள் இந்திய எ.ஃகு தொழிலுக்கு பயனளித்தன. இன்று, 140 மில்லியன் டன்களுக்கு மேல் கொள்ளளவு கொண்டதாக இந்திய எ.ஃகு தொழில் நீண்ட தூரம் வந்துள்ளது.

உற்பத்தியின் விரைவான உயர்வின் விளைவாக, இந்தியா 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கச்சா எ.ஃகு உற்பத்தியில் 2 வது இடத்தில் உள்ளது. உலக எ.ஃகு சங்கம் வெளியிட்ட தரவரிசைகளின் அடிப்படையில், 2019 ஆம் ஆண்டில் சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக, உலகில் மிகப்பெரிய கடற்பாசி இரும்பு (SPONGE IRON) அல்லது டிஆர்ஐ (DRI) உற்பத்தியாளராகவும், உலகின் 2 வது பெரிய எ.ஃகு நுகர்வோர் நாடாகவும் இருந்தது.

## புதிய தொழில்துறை கொள்கை

புதிய தொழில்துறை கொள்கை இந்திய இரும்பு மற்றும் எ.ஃகு தொழிற்துறையை (I) பொதுத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களின் பட்டியலிலிருந்து அதை நீக்குவதன் மூலமும் (II) கட்டாய உரிமத்திலிருந்து விலக்கு அளிப்பதன் மூலமும் தனியார் முதலீட்டிற்கு திறந்து வைத்தது. வெளிநாட்டு தொழில்நுட்பத்தின் இறக்குமதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு

இப்போது ஒரு தானியங்கி பாதையின் கீழ் சில வரம்புகள் வரை இலவசமாக அனுமதிக்கப்படுகின்றன. தாராளமயமாக்கப்பட்ட சூழ்நிலையில், புதிய மற்றும் ஏற்கனவே இயங்கி வரும் எ∴கு ஆலைகளுக்கு பரந்த திசைகளையும், உதவிகளையும் எ∴கு அமைச்சகம் செய்து தருகிறது.

## இந்தியாவில் இயங்கி வரும் தற்போதைய சில எ∴கு ஆலைகள்:

இந்தியாவில் 50க்கும் மேற்பட்ட இரும்பு மற்றும் எ∴கு தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றுள் சில கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளது:

| பெயர் | இருப்பிடம் | உரிமையாளர் |
|---|---|---|
| ஜின்டால் ஸ்டீல் அண்ட் பவர் லிமிடெட் | ராய்கர், அங்கலு, ஒடிசா | நவீன் ஜிண்டால் |
| டாடா இரும்பு மற்றும் ஸ்டீல் கம்பெனி லிமிடெட் (டிஸ்கோ) | ஜம்ஷெட்பூர், ஜார்கண்ட் | டாட்டா ஸ்டீல் |
| டாடா ஸ்டீல் லிமிடெட் | காளிங்கநகர், ஒடிஷா | டாட்டா ஸ்டீல் |
| விஸ்வேஸ்வரய இரும்பு மற்றும் எ∴கு ஆலை | பத்ராவதி, கர்நாடகம் | செயில் |
| பிலாய் எ∴கு ஆலை | சத்தீஸ்கர் | செயில் (ஸ்டீல் அதாரிட்டி ஆ∴ப் இந்தியா) |
| துர்காபூர் ஸ்டீல் ஆலை | துர்காபூர், மேற்கு வங்கம் | செயில் |
| பொகரோ எ∴கு ஆலை | ஜார்கண்ட் | செயில் |
| சந்திரபூர் ∴பெரோ அலாய் ஆலை | சந்திரபூர், மகாராஷ்டிரா | செயில் |
| IISCO எ∴கு ஆலை | அசன்சோல், மேற்கு வங்கம் | செயில் |
| சேலம் ஸ்டீல் ஆலை | தமிழ்நாடு | செயில் |
| ரூர்கேலா எ∴கு ஆலை | ஒடிசா | செயில் |
| துளுறு ஸ்டீல் | ஹோஸ்ட், பெல்லாரி, கர்நாடகா | துளுறு ஸ்டீல் |
| விசாகப்பட்டினம் ஸ்டீல் தொழிற்சாலை | விசாகப்பட்டினம், ஆந்திரப் பிரதேசம் | ராஷ்ட்ரிய இஸ்பாட் நிகாம் லிமிடெட் |
| பூஷன் ஸ்டீல் லிமிட் | அங்கலு, ஒடிசா | பூஷன் எ∴கு வரையறுக்கப்பட்டது |
| ரிம்ஜிம் இஸ்ஸ்பாட் லிமிடெட் | கான்பூர், உத்தரப் பிரதேசம் | யோகேஷ் அகர்வால் |

## வேலைவாய்ப்புகள்

- தொழில் சார்ந்த உற்பத்தி நிறுவனங்களில் இயந்திரங்களை உருவாக்குதல்
- வேளாண்மை, கட்டுமானம், பாதுகாப்பு போன்ற பல்வேறு தொழில்களுக்கு தேவையான இயந்திரங்களை உருவாக்குதல்
- மின் சாதனங்கள், ஆட்டோமொபைல் தொடர்பான இயந்திரங்கள் உருவாக்குதல்.
- தொழில் சார்ந்த சாதனங்களை உருவாக்குதல்

## பணிச்சூழ்நிலை

- உரிய பயிற்சிகளை வழங்கிய பிறகுதான் இப்பணியினை மேற்கொள்ள முடியும்.
- தொழிற்சாலையில் முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ பணியில் ஈடுபடலாம்.
- இத்துறையில் குழுவாகவோ அல்லது தனியாகவோ பணியில் ஈடுபடலாம்.
- பகுதி நேரமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ இத்துறையில் பணிபுரியலாம்.
- அரசு மற்றும் தனியார் துறையில் அதிக பணிவாய்ப்புகளை வழங்கும் துறையாக விளங்குகிறது.

## வேலை நேரம்:

- சுழற்சி முறையில் - தொழிற்சாலைகளில் பணிபுரியும் நிலை ஏற்படும்

## கல்வித் தகுதி மற்றும் பயிற்சி:

- குறைந்த பட்ச கல்வி தகுதியாக 8-ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் தொழில் சார்ந்த படிப்புகளான ITI கல்வித்தகுதியை தேர்ந்தெடுத்து படிக்கலாம்.
- அதிகபட்ச கல்வித் தகுதியாக மேல்நிலை (+2) கல்வியை முடித்தவர்கள் பட்டய படிப்பு மற்றும் (Diploma) மற்றும் பொறியியல் படிப்பு (B.E. / B.Tech) ஆகியவற்றை பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் வழங்கி வருகின்றது.
- சான்றிதழ் பயிற்சி (Certificate Courses) இந்திய இரும்பு மற்றும் எ∴கு துறையின் திறன் பயிற்சி குழுவால் (India Iron & Steel Sector Skill Council) வழங்கப்படுகிறது.

## ஐடிஐ படிப்புகள்

- தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் இரும்பு மற்றும் எ∴கு துறை தொடர்பிலான பல்வேறு பாடப்பிரிவுகளை தேர்ந்தெடுத்து படிக்கலாம்

## தொழில் பழகுநர் பயிற்சி (APPRENTICESHIP)

- இரும்பு மற்றும் எ∴கு துறை சார்பாக பட்டயப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு Board of Apprenticeship- வாயிலாக ஓராண்டு தொழில் பழகுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- இப்பயிற்சி மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் அளிக்கப்படுகிறது.
- இப்பயிற்சி பெறுவதற்கு www.boatsr-apprentice.tn.nic.in என்ற இணையதளம் வழியாக பதிவு செய்தல் வேண்டும்.

## பொறியியல் படிப்புகள்

- Mechanical, EEE, Metallurgy போன்ற பொறியியல் பாடப்பிரிவுகளை தேர்ந்தெடுத்து பயின்றால் இரும்பு மற்றும் எ∴கு துறை தொடர்பிலான பணிவாய்ப்பினை பெற இயலும்.

## அரசுத்துறை வேலைவாய்ப்புகள்

- மாநில போக்குவரத்து துறையில் Mechanical / Automobile தொடர்பான துறைகளில் பொறியியல், பட்டயம் பெற்றவர்கள் பொறியாளர்களாகவோ அல்லது டெக்னீசியன்களாகவோ பணிபுரியலாம். இவர்கள் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முக தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். SAIL போன்ற பொதுத்துறை நிறுவனங்களிலும் பணிநியமனம் பெறலாம்.

## தனியார் துறை வேலைவாய்ப்புகள்

- தொழிற்சாலைகளில் இரும்பு மற்றும் எ∴கு தொடர்பான உலோகதாள்களை வெட்டுதல், உலோக துண்டுகளை இணைத்தல் போன்ற நிலைகளில் பணிபுரியலாம்.
- அலங்கார கதவுகள் உருவாக்கல், மாடிப்படி மற்றும் இரும்பு கட்டுமானம், இரயில் ஆகியவற்றை உருவாக்கல் போன்ற துறைகளில் பணிபுரியலாம்.
- ஆட்டோமொபைல் உருவாக்கல் துறையில் பணிபுரியலாம்.

## சுயதொழில்

- பேருந்து, ஆட்டோ, கார், இருசக்கர வாகனம் பழுது பார்த்தல் பணியில் ஈடுபடலாம்
- இரும்பு தொடர்பான Mechanical / Automobile / Fitter / Mining Engineer / Industrial Engineer/ Diploma / ITI போன்ற கல்வித்தகுதியை முடித்தவர்கள் சிறுதொழில் தொடங்கி தொழில்முனைவோராக ஆகலாம்

## பணிகள்

- Assembly Operator
- Excavator Operator
- Fitter Instrumentation
- Dumper Operator
- Plasma cutter manual
- Machinist

## ஊதியம்

- தனியார் துறையில் ஆரம்ப கால ஊதியமாக மாதம் ரூ.8500 முதல் ரூ.15,000 வரை ஊதியம் பெறலாம்.
- இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் பணி முன் அனுபவம் பெற்றவர்கள் மாத ஊதியமாக ரூ.17,000 முதல் 19,000 வரை பெறலாம்

## தொழில் குறியீட்டு எண்

| தகுதி | குறியீட்டு எண் | விளக்கம் |
|---|---|---|
| **NCO 2015** | **03310** | **Diploma Engineering** |
| **NCO 2015** | **7421.0101** | **Iron & Steel Fitter Electronic Assembly** |
| **NCO2015** | **7233.0102** | **Iron & Steel – Machinist** |
| **ISCO 2008** | **7421** | **Electronic Mechanics and Services** |
| **NIC 2008** | **26109** | **Manufacture of other electronic components** |
| **NIC 2008** | **25119** | **Manufacture of other Structural metal products** |